பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 23 திங்கட்கிழமை (07 - 08 - 2000) VALAMPURI ஒலி: 231

## ★ புலிகள்மீதான தடையை நீக்கி;
## ★ அவர்களுடன் பேச்சு நடாத்தி
# ஈழத்தமிழர் அவலம் போக்க;
# இந்.அரசு முன்வர வேண்டும்

### - மதுரை பேராயர் வேண்டுகோள்

(சென்னை நிருபர்)

**நீண்டகாலப் போரினால் சிக்கித் தவிக்கும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைப் பாதுகாத்துக்காப்பாற்றும் தார்மீகப் பொறுப்புஇந்தியாவுக்கு உண்டு.**

**இந்தப் பொறுப்பினை உணர்ந்துவிடுதலைப்புலிகளுடன் இந்தியஅரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில்புலிகள்மீதான தடையை உடனடியாக நீக்கி அவர்களுடன் இந்தியா பேச முன் வரவேண்டும.**

இவ்வாறு தமிழ்நாடு கிறிஸ்தவ ஐக்கியபேரவைத் தலைவர் மதுரைப் பேராயர் எம். ஆரோக்கியசமி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிற்றி ஒவ்றிங்கோ' பயணிகள் கப்பல் நாளை வரும்

(திருகோணமலை)

400 பயணிகளை ஏற்றிக் கொண்டு ''சிற்றி ஒவ்றிங்கோ'' இன்று திருமலையிலிருந்து புறப்பட்டு நாளை பருத்தித்துறை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் புதன்கிழமை பயணிகளை ஏற்றிக் கொண்டு திருமலை புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந)

## ஒரு ஆதரவு வாக்கிற்கு 25 லட்சம் ரொக்கமும் கொழும்பில் வீடும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஒரு ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்கு 25 லட்சம் ரூபா ரொக்கமும், கொழும்பில் சொகுசு மாடி வீடும் வழங்க முன்வந்ததை அந்த எம். பி. மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த எம். பி. வேறு யாருமல்ல, குருநாகல் மாவட்ட எம். பி. ஏ.எச். எம். அலவி என்று தெரிய வந்துள்ளது. (வ)

## இனவாதக் கட்சியினர் கூட்டத்தில் குண்டு வெடிப்பு; நால்வர் படுகாயம்

(கொழும்பு)

சிங்கள இனவாத அமைப்புக்கள் நேற்று கொழும்பு நாரஹென்பிட்டிய பகுதியில் அரசியல் அமைப்புச் சீர்திருத்த மசோதாவை எதிர்க்கும் கூட்டம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தனர் இதன் போது அப்பகுதியில் குண்டொன்று வெடித்ததில் 4 பேர்கள் காயங்களுக்குள்ளாகி கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 5.15 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது.

வெகமெதுறு பகுதியில் மாதுருபாகே சோபததேரர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிங்களவீர விதான இயக்கம், சிங்கள

## அரசியல் சீர்திருத்த மசோதாவிற்கு 12 ஐ. தே. எம். பிக்கள் மேலும் ஆதரவு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதவிற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிகள் பன்னிரண்டு பேர் முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற வளாகப் பாதுகாப்பில் மோப்ப நாய்கள் காவல்

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்த ... தால் பாராளுமன்றக் கட்டடத்தின் பாதுகாப்பு பலப்

## சட்டமூலநகலை ஆராய பிரதம நீதியரசர் தலைமையில் ஐவர் கொண்டகுழு நியமனம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி ... சமர்பிக்கப்படவுள்ள தேர்தல் சீர்திருத்த சட்டமூல

## மோப்ப நாய்கள் காவல்

(கொழும்பு)
அரசியலமைப்பு சீர்திருத்த மசோதா இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட விருப்பதால் பாராளுமன்றக் கட்டடத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாதுகாப்பிற்கு சுமார்
(8ஆம் பக்கம் பார்க்க)

மாதுருபாகே சோபததேரர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிங்களவீர விதான இயக்கம், சிங்கள
[8ஆம் பக்கம் பார்க்க)

## ஐவர் கொண்டகுழு நியமனம்

(கொழும்பு)
பொதுஜனஐக்கியமுன்னணி அரசினால் இம்மாதம் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள தேர்தல் சீர்திருத்த சட்டமூல மசோதா சமர்பிக்கப்படும்
[8ஆம் பக்கம் பார்க்க]

## தமிழர்விடுதலைக்கூட்டணி மத்தியகுழுஇன்றுகூடுகிறது!

(கொழும்பு)
கொழும்பில் நேற்று கூட இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் இன்றுதிங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக கொழும்பில் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பில் இருந்து
(8 ஆம் பக்கம் பார்க்க

★ அரசியல் சீர்திருத்த மசோதாவை

# தமிழ்எம்.பிக்கள் ஆதரித்தால் நாமும் தேர்தலில் குதிக்கவேண்டி வரும்!

(கொழும்பு)
அரசியல் அமைப்புச் சீர்திருத்த மசோதா தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களான ஜோசப்பரராசசிங்கம்பொன் செல்வராசா மற்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் எஸ். சந்திரசேகரன் ஆகியோரின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அ. வினாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை தமிழ்க் கட்சியினர் ஆதரித்து வாக்களித்தால் அது தமிழ் மக்களுக்கு இழைக்கும் வரலாற்று துரோகமாகும்.
(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கண்ணிவெடி ஏழு பொலிஸார் காயம்

(வவுனியா)
வவுனியா பூந்தோட்டம் வீதியில் நேற்றுக்காலை 6 30 மணியளவில் இடம்பெற்ற கண்ணிவெடி தாக்குதலில் ஏழு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

பொலிஸார் பயணம் செய்த பஸ்வண்டி முற்றாகச் சேதமடைந்தது.

காயமடைந்த பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ந-103)

# பல்கலை புகுமுக மாணவர்கள் மீது வடமராட்சியில் "ராக்கிங்" சேட்டை

(புலோலி)
ராக்கிங் என்ற போர்வையில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் புகுமுக மாணவர்மீது காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்ட சம்பவம் வடமராட்சிப் பகுதியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் அறியப்படுவதாவது;
பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்ற வேளை யாழ் பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவ பீடமாணவர்கள் சிலர் அந்த குழுமிபிருந்த மருத்துவ பீட புதுமுக மாணவர்களை பலமாக தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்று கூடல் நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட விரிவுரையாளர். பயிற்சி வகுப்பு இணைப்பாளர் ஆகியோர் அவமானப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் சூத்திர
(8 ஆம் பக்கம் பார்க்க)

## 600 பாவனையாளர்களுக்கு நேரடி தொலைபேசி இணைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ரெலிக்கொம் நிறுவனம் சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு நேரடி தொலைபேசி இணைப்புக்களை வழங்கியுள்ளதாக ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் 'வலம்புரி'க்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை
(8 ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆயுதத்தைப்பற்றி கனவுகூட காணாதவர்கள்
# சோதனையிடப்படும் அவலவாழ்வே இன்றுள்ளது

## ஜனாதிபதிக்கு யாழ். இந்து சமய பேரவை மகஜர்

(தென்மராட்சி)

இன்று வலிகாமப் பிரதேசத்தில் ஒரு பகுதியிலேயே அகதிமுகாமில் வாழ்வது போல இருண்டு குறுகிய தமிழ் பிரதேசத்தில் வாழ வேண்டியுள்ளது. நினைத்த இடத்திற்கு நினைத்த பொழுது செல்லமுடியாதுள்ளது. ஆயுதமேந்துவதை வாழ்வில் கனவுகூட காணாதவர்கள் சோதனையிடப்படும் துர்ப்பாக்கிய வாழ்வு இங்குள்ள சகலருக்கும் உரியதாகிவிட்டது

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவையின் செயலாளரான எஸ். சக்திகிரீவனால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது எமது நாட்டில் நீண்ட நெடு நாட்களாக நடைபெறும் இனப்பிரச்சினை தற்போது உச்சக்கட்டத்தை அடைந்து வடக்குக்கிழக்கில் வாழும் முழுத் தமிழ்மக்களையும் அகதிகளாக்கும் நிலைக்கு ஆட்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த இந்த யுத்தத்தில் தமிழ்மக்கள் ஆண்டாண்டு காலமாக தேடிச் சேர்த்த சொத்துக்கள் சூறையாடப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றது.

தமிழ் மக்களின் புனித வழிபாட்டுத் தலங்கள் குறிப்பாக வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்கள் உட்பட பல திருத்தலங்கள் பகுதியாகவோ முழுமையாகவோ அழிக்கப்பட்டு வருகின்றன:

இப்போரில் பெருமளவில் இந்துக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும், அங்கவீனர்களாக்கப்பட்டும் வருகின்றனர்,

இதனால் தமிழ்ப்பிரதேசத்தின் பெரும்பான்மைப் புனித மதமான இந்து மதத்தைப் பின்பற்றுவோர் முழுமையாக அழிந்துவிடும் மாபெரும் அபாயகரமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவிய உயர்தரப் பாடசாலைகள் பல மூடப்பட்டுள்ளன. பல நூல் நிலையங்களும் தொழில் கூடங்களும், சமய சமூக வளநிலையங்களும் அவ்வாறேயாகும்.

மேலும் தென்மராட்சியில் தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் தாம் கையில் எடுத்த பொருட்களுடனேயே வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எனவே சாதாரண அப்பாவிப் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சமாதான முயற்சியைத் தீவிரப்படுத்தி நிபந்தனையற்ற முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கவும்.

மேலும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தை பூரண சுயாட்சியுள்ள பிரதேசமாக அங்கீகரித்து தமிழ்மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கி இந்நாட்டைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இப்படி அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-77)

## இன்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஆனைசயர் கதிரமலை அந்திரான் சங்குவேலியில் வசிக்கும் எனது 500705230 V இலக்கமுடைய அடையாள அட்டை சங்குவேலியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இல. 15, வெள்ளாந்தெருவில் அமைந்துள்ள ''வலம்புரி'' பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1623)

## மகஜர் கையளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மாமுனை, செம்பியன்பற்று, தாழையடிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து குடத்தனை மணற்காட்டுப் பகுதிகளில் தங்கியுள்ளமக்கள் தமக்கு உதவுமாறு கோரி கெயர் நிறுவனத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். (சு-44)

## சிகிச்சை நாட்கள் மாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட தாய், சேய் சிகிச்சை நிலையங்களில் நடைபெறும் சிகிச்சை நாட்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி எஸ். செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

அல்வாயில் மாத முதல் கிழமை நடைபெற்ற சிகிச்சை இரண்டாவது புதன்கிழமையும், வதிரியில் முதலாவது திங்கள் நடைபெற்றவை புதனும் மாதனையில் மாதத்தில் நான்காவதுதிங்கள் நடைபெற்றவை மூன்றாவது புதன் கிழமையும் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-23)

# ஆசிரிய வாண்மை விருத்திக்கு
# வெளிநாட்டில் குறுங்காலப் பயிற்சி

## விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் வாண்மைத் தொழிற் திறனை வளர்க்கும் நோக்குடன் குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி ஒன்றினை ஆசிரியர்களுக்கு வழங்க தேசிய கல்வி ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.

இத் திட்டமானது 2000 ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2002 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நடைமுறைப் படுத்தப்படும்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கொரியா, இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல், ஆகிய நாடுகளில் மூன்று வாரகாலம் பயிற்சியைப் பெறுவதற்கு பின்வரும் தகைமையுடைய ஆசிரியர்களிடமிருந்து தேசியகல்வி ஆணைக்குழு விண்ணப்பம் கோரியுள்ளது.

★ விண்ணப்பதாரி 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

★ வாண்மைத் தொழிற் தகைமையை பூர்த்தி செய்திருப்பதுடன். விஞ்ஞானம் அல்லது கணிதம் அல்லதுவிவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

★ 1ஏ. பி. பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கற்பிப்பவராக இருத்தல் வேண்டும்.

★ கடந்த 5 ஆண்டுகாலத்தில் உயர்தரத்தில் தொடர்ச்சியாக கற்பித்தவராக இருத்தல் வேண்டும்.

★ 10 வருடங்கள் அரசாங்கப் பாடசாலை ஆசிரியராக இருத்தல் வேண்டும்.

இவை தவிர

★ ஆங்கில மொழித் திறன்

★ கஷ்டப் பிரதேசங்களில் இரண்டு வருடங்கள் சேவையாற்றிருத்தல் போன்றவை மேலதிக தகமையாகக் கருதப்படும்.

அதேவேளை ஏற்கனவே வெளி நாட்டில் பயிற்சி பெற்றிருப்பவர்கள் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியாது,

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர். வெளிநாட்டுத்தொடர்புகள், வெளிவிவகாரக் கிளை, கல்வி உயர்கல்வி அமைச்சு, இசுருபாய என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளது.

விண்ணப்பப்படிவம் தேவைப்பட்டோர் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் க. இராசதுரையிடமும் சங்கத்தின் செயலாளரிடமும் பெற்றுக் கொள்ள முடியும், (ந)

## மாடியில் இருந்து விழுந்த சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் சிறுவன் ஒருவன் மேல்மாடியில் இருந்து தவறி விழுந்து ஆபத்தான நிலையில் நேற்று மாலை யாழ் மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வராசா நிரோஜன் (வயது 9) என்னும் சிறுவனே படுகாயமடைந்துள்ளவராவார். (வ-க-12)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 144546 ஏ | 149968 ஏ |
| 150111 ஏ | 150111 பி |
| 150128 ஏ | 150196 ஏ |
| 150196 பி | 150244 ஏ |
| 150244 பி | 152292 ஏ |
| 152296 ஏ | 152330 ஏ |
| 152330 பி | 152330 சி |
| 152637 ஏ | 152637 பி |
| 152708 ஏ | 152708 பி |
| 152785 ஏ | 152890 ஏ |
| 152891 ஏ | 152891 பி |
| 152891 சி | 153060 ஏ |
| 153060 பி | 153060 சி |
| 153060 டி | 154165 ஏ |
| 154231 ஏ | 154255 ஏ |
| 149636 ஏ | 150016 ஏ |
| 150069 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 149153 ஏ | 149153 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 144564 ஏ | 144727 ஏ |
| 147840 ஏ | 147840 பி |
| 147840 சி | 147840 டி |
| 149962 ஏ | 149962 பி |
| 149962 சி | 149962 டி |
| 149962 ஈ | 149962எவ் |
| 150084 ஏ | 150084 பி |
| 150127 ஏ | 150201 ஏ |
| 150267 ஏ | 150267 பி |
| 150288 ஏ | 150288 பி |
| 150289 ஏ | 150289 பி |
| 150295 ஏ | 150295 பி |
| 150295 சி | 152318 ஏ |
| 152401 ஏ | 152401 பி |
| 152453 ஏ | 152453 பி |
| 152644 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 152035 ஏ | 152056 ஏ |

### தெல்லிப்பழை

151968 ஏ

### உடுவில்

150777 ஏ

## வருடாந்த மகோற்சவம்

(மண்கும்பான்)

பொன்னாலை ஸ்ரீவரதராயப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டு தினங்கள்நடைபெறஉள்ளது.

எதிர் வரும் 23 ஆம் திகதி அன்று காலை 10.00மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 8.30 மணிக்கு திருவடி நிலையில் தீர்த்த உற்சவமும் நடைபெற உள்ளது.

எதிர் வரும் 25 ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் பிற்பகல் திருக் கல்யாணமும் நடைபெற உள்ளது. (சு-83)


## 750 மில்லி லீற்றர் வெற்றுப் போத்தல் தேவை

எமக்குக் கூடிய தொகையான 750 மில்லி லீற்றர் (மெண்டிஸ்) வெற்றுப் போத்தல்கள் தேவைப்படுகின்றன. வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு எமக்கு வழங்கலாம். நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.

பொது முகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள,
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி.

பிப்பிலிச் சந்தி,
மானிப்பாய், (கி,692)


# யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறுபான்மையினரின் நலன்கள் சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்து வந்த துன்பங்களுக்கெல்லாம் தெளிவாகவும், நியாயமான முறையிலும் தீர்வு கண்டு அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தமிழ் மக்களது நம்பிக்கையைப் பெறவேண்டும்;

இன்னும் சில காலத்தில் வேறுகட்சி அதிகாரத்திற்கு வரலாம். யார் ஆட்சிக்கு வந்தாலும் சகல சிறுபான்மையின மக்களதும் உரிமைகளை சட்டபூர்வமாக வழங்கியே தீர வேண்டும் எனும் எமது நீண்டகால ஆசை தான், இன்று உங்கள் முன் அரசியல் யாப்பு சீர்திருத்த சட்ட மூலம் என்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் அரசியல் யாப்பு சீர்திருத்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சி யுகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தத்தினால், எமது படையினரும் பொலிஸாரும் சிங்களமக்களும் மட்டும் மரணிக்கவில்லை.

17 வருடகாலமாக வட பகுதியில் நடைபெற்றுவரும் இந்த யுத்தத்தினால் அழிந்து கொண்டிருப்பது எமதுமக்கள் தான். இவர்களது உயிரைப் பாதுகாக்கும் வகையில் இன்று சமர்ப்பித்துள்ள அரசியல் யாப்பு சீர்திருத்த சட்டமூலத்திற்கு ஆதரவு தாருங்கள் என அனைவரையும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் பொறுப்புணர்வுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் நலனிலும். பொதுமக்களின் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டவர்கள் என்ற வகையில் இதனை யாரும் எதிர்க்கமாட்டார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்;

இதனைக் கருத்திற் கொண்டே சுதந்திரத்தின் பின் 52 வருடங்களாக வழங்கப்படாத தமிழர்களுடைய உரிமைகளை வழங்கி அவர்களுடைய சுதந்திர வாழ்வை உறுதிசெய்ய நாம் முன்வந்துள்ளோம்.

1983 ஆம் ஆண்டு, நாலா பக்கமும் தமிழரைச் சூழ்ந்து கொண்டு வெட்டியும், குத்தியும், எரியூட்டியும் கொன்று அவர்கள் சொத்துக்களைச் சூறையாடியதன் மூலம் வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு வழிசமைத்தனர் அப்போதைய ஆட்சியாளர்;

இதுவரை காலமும் தீர்க்கப்படாது இருக்கும், எவராலும் மாற்றுவழி காண முடியாத இந்த இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வுவழி, தமிழ் மக்களுடைய உரிமைகளை உரியவகையில் வழங்குவதே என்பது எனது எண்ணம் என்று தெரிவித்தார்; (உ)

தமக்கு கிடைக்கவேண்டிய கொடுப்பனவை

# இதுவரை பெறாத அதிபர், ஆசிரியர்

# தம்முடன் தொடர்பு கொள்ளவும்

## இலங். தமிழர் ஆசிரியர் சங்க துணைச் செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1995ம் ஆண்டு 10ஆம் மாதம் 1ஆம் திகதி முதல் அதிபர், ஆசிரியர்களுக்கு கிடைக்கவேண்டிய சம்பளத்தை இதுவரை பெறாதவர்கள் கிளைச்செயலாளர்கள் ஊடாக தன்னோடு தொடர்பு கொள்ளுமாறு அப்பணத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலர் த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவத்தின் இடைவிடாத முயற்சியால் அதிபர் ஆசிரியர்களின் பாக்கிச் சம்பளம் கடந்தவாரம் கிடைத்துள்ளது

தற்போதைய சூழ்நிலையில் இடம் பெயர்ந்து வாழும் அதிபர்கள் ஆசிரியர்கள் (குறிப்பாக தென்மராட்சிப் பகுதியைச் சார்ந்தவர்கள்] இதனால் பெரும்பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம்:

இதற்கான பெருநிதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க குறுகியகாலத்தில் பெற்றுத்தந்த வட கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்தனாவிற்கு பாக்கிச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தனியாகவோ குழுவாகவோ நன்றி தெரிவித்து கடிதம் அனுப்புமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி அதிபருக்கு சொகுசு கார் அன்பளிப்பு

(புலோலி)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதவின் பாவனைக்கென பெறுமதிமிக்கசொகுசு கார் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஈ. பி. டி. பி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. பிரமுகருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது,

பெறுமதிமிக்க நூல்கள், கணனிகள் போன்றனவும் கையளிக்கப்பட்டன-

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் ஐ, ஸ்ரீரங்கேஸ்வரன், கோப்பாய் பிரதேச ஈ. பி. டி. பி அமைப்பாளர் ஏ. ரவி ஆகியோர் கலந்துகொண்டனர்:

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி தற்பொழுது மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது: (க-52)

## மலசலகூடம் அமைக்க நடவடிக்கை

(மண்கும்பான்)

சர்வதேச கெயர் நிறுவனம் காரைநகர்ப்பகுதியில் 60 தற்காலிக மலசல கூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது:

காரைநகர் கல்வளை தாழ்வு, மருதபுரம், ஊரி ஆகிய மூன்று கிராமங்களில் தலா 20மலசலகூடம் அமைக்கப்பட உள்ளது; (சு-83)

## மணற்காட்டு பகுதி நேற்று சுற்றிவளைப்பு

(புலோலி)

வடமராட்சிகிழக்கு மணற்காட்டுப் பகுதிநேற்றுக் காலை 7.00 மணியளவில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாக்கப்பட்டது.

பொதுமக்கள் அனைவரும் அங்குள்ள விளையாட்டு மைதானத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டபின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்:

இச்சுற்றிவளைப்பின் போது எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை: (சு-43-52)

பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டும்கூட

# யாழ். நகரில் பூரணத்துவமான கண்சிகிச்சைநிலையம்நிறுவவில்லை

## சம்பந்தப்பட்டோர் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் நன்மைகருதி நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக்கொண்ட பூரணத்துவமான கண்வைத்தியசாலை ஒன்றினை யாழ்நகரில் அமைப்பதற்கென அமெரிக்காவிலுள்ள சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சர்வதேச நிதி உதவித்திட்டத்தின்கீழ் கடந்த வருடம் 10 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும்கூட, இத்திட்டத்தின் அமுலாக்கல்பணிகள் எதுவும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையென அறியப்படுகின்றது.

இத்திட்டம் இன்னமும் செயல்படுத்தப்படாமை தொடர்பாக வடபிராந்தியத்திலுள்ள லயன்ஸ்கழகங்களின் உறுப்பினர்கள்மத்தியில் மிகுந்த அதிருப்தியும் விசனமும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இதுவிடயம்தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது யாழ்ப்பாணத்தில் ஒரு பூரணத்துவமிக்க கண்வைத்தியசாலைஒன்று இல்லாமைகாரணமாக கண்களில் நோய் உள்ளவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிவருகின்ற கண்சிகிச்சை வைத்தியநிபுணரான டாக்டர். எஸ். குகதாசனுடன் இவ் உத்தேச கண்சிகிச்சை வைத்தியசாலை நிறுவுவதுபற்றியும் அதற்குத் தேவைப்படக்கூடிய நவீன உபகரணங்கள்பற்றியும் இத்திட்டத்துடன்சம்பந்தப்பட்ட லயன்ஸ் பிரமுகர்கள் கலந்தாலோசனை செய்ததாகவும் தெரியவருகின்றது. (க-77)

## இரவுநேரக் கோழித் திருடர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்

(சங்கானை)

திருடிய கோழிகளை சந்தையில் விற்க முற்பட்ட சமயம் கையும் மெய்யுமாக திருடர்பிடிபட்டனர்.

மேற்படி சம்பவம் அண்மையில் சங்கானைச் சந்தையில் இடம் பெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் மில்லேன் பகுதியில் உள்ள வீடொன்றில் இரவு வேளையில் கோழிகளைத் திருடியவர்கள், அடுத்த நாள் காலை சங்கானைச் சந்தையில் அவற்றை விற்க முயன்ற போது உரிமையாளர்களால் இனம் காணப்பட்டதால் திருடர் பிடிபட்டனர்.

தற்போது மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ)

## அரசியல் சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கண்டியில்

(கண்டி)

அரசியல் யாப்பு சீர் திருத்தம் தொடர்பாகவும் புதிய தேர்தல் முறை பற்றியும் இன்று 7ஆம் திகதி மாலை மலையகத்தை சார்ந்த அனைவரோடும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை கண்டியில் நடத்த உள்ளாதக இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பி. பி. தேவராஜ் தெரிவித்துள்ளார்.

கண்டி சனசமூக நிலையத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருப்பதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிருப்தியாளர் குழுவில் இடம் பெறும் 5 உப தலைவர்களும் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

கூட்டுறவு ஊழியர்

# புதிய சம்பள நிர்ணயம்

# இதுவரையில் அமுலில் இல்லை

ஊழியர்கள் விசனம்

ளர் என நம்பப்படுகின்றது:

மாலை [illegible] சார்ந்த அனைவரோடும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை கண்டியில் நடத்த உள்ளதாக இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் நாடாளுமன்ற [illegible] காங்கிரஸ் அதிருப்தியாளர் குழுவில் இடம் பெறும் 5 உப தலைவர்களும் இதில் காந்து கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## எழுவை தீவில் தொற்று நோய் அபாய நிலையில் நோயாளர்

(ஊர்காவற்றுறை)

எழுவைத் தீவில் தொற்று நோய் பரவுவதாக தெரிய வருகிறது. காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்தி ஆகிய தொற்று நோய் பரவி வருவதனால் அங்கு வைத்திய வசதி இல்லாததனால் மக்கள் பெரும் அவதிப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மணல் மண்ணைக் கொண்ட மேற்படி தீவில் கடுமையான வெப்பத்தினாலும் இக் காலப் பகுதியில் இங்கு நீர் அருகிப் போவதும் வழக்கமாக உள்ளதால் தொற்று நோய் பரவுவதாக தெரிய வருகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து சுமார் 8 கடல் மைல் தூரத்தில் மேற்படி தீவு உள்ளதாகவும் இங்கு அரச வைத்தியசாலை எதுவும் இல்லை எனவும் நோயாளிகள் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற வேண்டியிருப்பதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-75)

## மந்திகை வைத்தியசாலையில் நோயாளர் வருகை அதிகரிப்பு

(மந்திகை)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் நிலவி வந்த மாவட்ட அதிகாரிவெற்றிடத்திற்கு வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளையும் மருத்துவ அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டதை அடுத்தே நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மனநோய் பிரிவில் சிகிச்சைபெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-23)

# இதுவரையில் அமுலில் இல்லை

## ஊழியர்கள் விசனம்

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழவினால் அங்கீகரிக்கப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தினை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எந்தவொருகூட்டுறவுசங்கமும் இது வரை அமுல் செய்ய வில்லை எனத்தெரியவருகின்றது.

இப் புதிய சம்பளத் திட்டம் இவ் வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்படல் வேண்டும் என கூட்டுறவு திணைக்களத்தினர் சுற்றறிக்கைகள் மூலம் அறிவுறுத்தப் பட்டிருந்தனர்.

இப் புதிய சம்பளத்திட்டம் வழங்கப்படாமையினால் குடாநாட்டில் சுமார் 5 ஆயிரம் கூட்றவு ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என நம்பப்படுகின்றது.

இது விடயம் பற்றி சில கூட்டுறவுச் சங்கங்கள் சில முயற்சிகளை ஆரம்பத்தில் எடுத்திருந்த போதிலும் கூட கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் இது வரை வழங்கப்படவில்லை.

அதேவேளை, கூட்டுறவு ஊழியர்களின் நலன்களைக் கவனிக்கும் கூட்டுறவு ஊழியர் தொழிச் சங்கம் கூட இது விடயத்தில் போதியளவு அக்கறையும் ஆர்வமும் காட்டாமல் இருப்பது பற்றி கூட்டுறவு ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-77)

## மின்சாரம் தாக்கி குடும்பப்பெண் பலி

(சங்கானை)

காரைநகர் ஆலடி வெடியரசன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி வீரசிங்கம் (வயது 45) கடந்த 5ஆம் திகதி அதிகாலை 4. 30 மணியளவில் மின்சாரம் தாக்கி பலியானார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, மின்கம்பத்தினூடாக பக்கத்து வீட்டிற்கு தொடர்பிருந்த வயர் இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்குகாரணமாக வயர் எரிந்து அறுந்து அப்பெண்ணின் மேல் விழுந்ததினால் ஸ்தலத்திலே துடிதுடித்து பலியானார். (க-83-116)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு இப்படியும் சில உதவிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சங்கானை, சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளில் வசிப்பவர்களுக்கு சவர்க்காரம், தேங்காய், உடுபுடவைகள், குழந்தை பால்மா என்பவற்றை தென்னிந்திய திருச்சபையினர் வழங்கியுள்ளனர்.

சுமார் 90 குடும்பங்கள் வரையில் ஆலயங்களிலும் முகாம்களிலும் தங்கியிருப்பதாகவும் இவர்களுக்கு தேவையான பல்வேறு உதவிகள் காலத்திற்குக் காலம் தாம் வழங்கி வருவதாகவும் அவர்களின் நலன்கள் கவனிக்கப்பட்டு வருவதாகவும் திருச்சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர் (க)

## வன்னியில் தொடரும் கடும்மழை இடம்பெயர்ந்தோர் பெரும் அவலம்

(வவுனியா)

சில நாட்களாக வன்னியில் தொடரும் கடும் மழைகாரணமாக, இடம்பெயர்ந்து இராணுவக் சட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் வசித்து வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கூரை விரிப்புகளுக்குகீழும் குடிசைகளிலும் வாழும் மக்களின் இருப்பிடங்களில் வெள்ளம்புகுந்ததால் அவர்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைய வேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரும்மழையுடன் இடி மின்னலும் காணப்படுவதால், பலஇடங்களில் இடி தாக்கிய சம்பவங்களும் இடம் பெற்றுள்ளது.

கடும்மழை, வெள்ளப் பெருக்கு காரணமாக இரணமடுக்குளத்தின் வான் கதவுஒன்று சேதமடைந்துள்ளதாகவும், இதனைத் திருத்துவதற்கு வேண்டிய உபகரணங்களை இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில இருந்து எடுத்துவருவதில் உள்ள இடைஞ்சல்கள் காரணமாக அதன் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட முடியாதிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (உ)

## மன்னம்பிட்டியில் 4 மின் கோபுரங்கள் மீது தாக்குதல் மட்டு,மின் எந்நேரமும் தடைப்படலாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு லக்ஸபான நீர்த்தேக்கத்தில் இருந்துமின்சாரத்தை வழங்கும் 4மின் கோபுரங்கள் மன்னம்பிட்டி பாலத்திற்கருகில் சேதமாக்கப்பட்டுள்ளது.

எனினும் கோபுரங்கள் முற்றாக சேதமடையாத காரணத்தினால் மின் விநியோகம் பாதிக்கப்படவில்லையாயினும் எந்நேரமும் மின்விநியோகம் தடைப்படலாம்என தெரிய வந்துள்ளது.

மேற்படி மின் கோபுர திருத்த வேலைகளுக்குப் பொறுப்பான பொலநறுவை மின்சாரசபை இன்னமும் இதன் திருத்தவேலைகளை ஆரம்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## யாழ்ப்பாணம்- இறுப்பிட்டி பஸ்சேவை இடைநிறுத்தம்

### பொதுமக்கள் பரிதவிப்பு

(மண்டைதீவு)

யாழ்ப்பாணத்திலிருந்து இறுப்பிட்டிவரையான பஸ் சேவை நிறுத்தப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பெருங் காட்டுச் சந்தியிலிருந்து 4 மைல்கள் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சேவை மீண்டும் வழமைபோல் ஆரம்பிப்பதற்கு வடபிராந்திய போக்குவரத்து சபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-111)

## அரசியல் யோசனைக்கு ஆதரவுகொடுப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும்துரோகம்

### ரெலோ எம். பி. ஸ்ரீகாந்தா

(மட்டக்களப்பு)

புதிய அரசியல் யாப்பு யோசனைக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்குவரலாற்றுத் துரோகம்

பிராந்திய பொலிஸ் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டம்- ஒழுங்கு என்ற போர்வையில் பிராந்திய நிர்வாகத்தை மத்திய அரசு

யாழ். திறந்த பல்கலை

## முகாமைத்துவ பரீட்சை முடிவு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் முகாமைத்துவத்தில் டிப்ளோமா முதலாம் ஆண்டுக்கான(மட்டம் 3)இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

யாழ் பிராந்திய நிலையில் இருந்துதோற்றிய பரீட்சாத்திகளுக்கானபரீட்சை முடிவுகள் பின் வருமாறு.

ஜி. ஸ்ரீதரன் பி, 4சி
ஆர். சாஜிசன் பி,4 சி
எஸ். திருவருட்செல்வன் ஏ,4 பி
ஏ. சத்தியமூர்த்தி 3 பி,2 சி
எம். பிரசாந்தன் பி,4 சி
எஸ். செல்வதாஸ் 2பி, 3சி
எஸ். தனஞ்சயன் 3 பி,2சி
ஜி. மது கமனசன் ஏ,2பி,2 சி
எஸ். பிரசாந் 2 ஏ,பி,2சி
பி. பிரதீபன் பி,4சி
எஸ். சுகேந்திரன் 5 சி
ரி. சசிகுமார் ஏ,பி,3சி
எஸ். ஏ. ஞானேந்திரன் ஏ, 2பி, 2சி
ஜே. பிரான்ஸ்சேவியர் 4 சி
எஸ். சுகந்தினி 2 பி,3 சி

மேலும் மேற்படிகற்கை நெறியில் ஐந்து பாடத்தில் ஒன்பது பேர் சித்தியடைந்துள்ளனர். மேலதிக விபரங்களை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## மாணவருக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் வசிப்பவர்கள் உட்பட அனைவரும் தமது பெற்றோருடன் எதிர்வரும் 10ம் திகதி காலை 9மணியளவில்யாழ்.வண்ணை நாவலர் வித்தியாசாலைக்கு சமூகம் அளிக்குமாறு மேற்படி பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## ஆசிரியர் மாணவர் சுற்றுலா

(செம்பியன்பற்று)

பலாலிஆசிரியர்கலாசாலை இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களில் ஒரு தொகுதியினர்விடுமுறையைக் கழிப்பதற்காக எதிர்வரும் புதன் கிழமை (9ஆம் திகதி) கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் நயினாதீவு,நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களிக்கு சென்று வரலாற்று சிறப்பு மிக்க பலபகுதிகளைப்பார்க்க உள்ளதாக தெரிவித்தனர். (க-42)

## மீண்டும் இராணுவ ஒலிபரப்பு சேவை

(யாழ்ப்பாணம்)

இரு மாதகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த விசேட இராணுவ ஒலிபரப்புச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் 50 வீடுகள் கையளிப்பு ஜோசப் எம்.பியின் முயற்சி பலிதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் துறையை ஊக்குவிக்கும் முகமாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு 50 வீடுகளை கடற்றொழிலாளரிடம் கையளித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் முயற்சியை அடுத்து இவ் வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

மாவட்ட தேசிய நீரக வள அபிவிருத்தி அதிகாரி எஸ். தவபாலரெத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பிரதம அதிதியாக. கலந்துகொண்டு மேற்படிவீடுகளை உரியவர்களிடம் கையளித்தார்.

இவ்வைபவத்தின்போது நண்டு வளர்ப்புத்துறையில் ஈடுபட்டு வரும் மீனவர்களிற்கு தொழில் நுட்பத்துடன் கூடிய பெறுமதியான நண்டுக் கூடுகளும் கையளிக்கப்பட்டது.

மாவட்ட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். மனோகரன் உட்பட பல பிரமுகர்களும், அதிகாரிகளும் இவ்வைபவத்தின் போது கலந்து கொண்டனர். (சு-60)

## வீரதீரசெயல் காட்சி

[செம்பியன்பற்று]

குடத்தனைசம்பேதுருவானவர் ஆலய திருநாளையொட்டி அண்மையில் ஆலய சூழலில் குடத்தனை இளைஞர்களினால் வீரதீரச் செயல்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

மறைந்த சாண்டோ துரைரத்தினத்தின் சிரேஷ்ட மாணவனான புவனேந்திரன் பயிற்சியளித்த இளைஞர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றினர்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வேலாயுதம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக வடமராட்சிக் கிழக்கு ப. நோ. கூ. ச பொதுமுகாமையாளர் சிறிஸ்கந்தராசாவும் கலந்து கொண்டனர். (த-42)

## ஆனைக்கோட்டை, நவாலியில் கட்டாக் காலிகளின்தொல்லை அதிகரிப்பு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ,நவாலிப்பகுதியில் கட்டக்காலிகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது.

இரவுவேளையில் திரியும் இக் கட்டாக்காலிகள் பலரது வீட்டு வளவுகளுக்குள் புகுந்து அங்குள்ள வாழை,தென்னை மற்றும் பயன்தரும் மரங்களை அழித்துவருவதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (க-120)

களுக்குவரலாற்றுத் துரோகம் இழைத்தவர்களாகவே கருதப்படுவார்கள் என ரெலோ முதல்வர் என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில்;

''புதிய அரசியல் யாப்பு பெரும்பான்மை இனத்தின் அதிகாரப்பிடியினை வலுப்படுத்துவது மட்டுமன்றி தமிழர்களின் தாயகத்தை இரு கூறுகளாகவும் பிரிக்கின்றது''

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள வட - கிழக்கு மாகாணத்தை 10 வருடங்களின் பின்னர் நிச்சயம் பிரிப்பதற்காகவே இந்த அரசியல் யாப்பு கொண்டுவரப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்;

சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் வட-கிழக்கு இணைப்பு தீர்மானிக்கப்படுவதை ரெலோ நிராகரிக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிவிப்பில்,

பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது அல்ல என்றும் இதில் காணி அதிகாரம் பிரா்ந்திய சபைகளுக்கு கிள்ளித் தெளிக்கப்பட்டுள்ளது;

வாகத்தை மத்திய அரசு தனது கைகளில் எடுத்துக் கொள்ளும் அதிகாரம் போன்ற பல்வேறு காரணங்களினால் புதிய அரசியல் யாப்பை ரெலோ எதிர்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் தரப்பில் விடுதலைப்புலிகள் பிரதான சக்தியாக இருக்கின்றனர். அரசியல் யாப்பு சட்டமாக்கப்பட்ட பின்னர் அதன் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேசலாம் என்று அரசு கூறுவது சிறு பிள்ளைத்தனமானது என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

பட்டுள்ளது.

இரவு 10.05 மணி முதல் 10.35 மணிவரை இச்சேவை இடம்பெற்று வருகிறது. (உ-2)

## வரணியில் கோஷ்டி மோதல்

(புலோலி)

வரணிப்பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலொன்றில் தாய், இரண்டு பிள்ளைகள் உட்பட ஐந்துபேர் வெட்டுக் காயங்களுக்கு ஆளாகி மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; (ந-52)

## பாராளுமன்ற கட்டடதொகுதி அதிவிசேட பாதுகாப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் முக்கிய கூட்டத்தொடர் இன்று முதல் எதிர்வரும் 11ம் திகதி வரை நடைபெற இருப்பதனால் பாராளுமன்றக் கட்டட தொகுதி அமைந்துள்ள ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டைப் பகுதியில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. போக்குவரத்துப் பாதைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜெயவர்த்தனபுர வீதி ஊடான பத்தரமுல்ல சந்தி வீதிகளில் விசேட வாகனப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் ஏனைய வாகனங்களுக்கு இவ்வீதிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## மிகவும் உயர்ந்த இராஜ கோபுரம் மட்டக்களப்பில் அமைப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு இலங்கையில் மிகவும் உயரமான ராஜகோபுரம் மட்டக்களப்பு அமிர்தகளி ஸ்ரீ மாமங்கேஸ்வரர் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

150 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இவ் ராஜகோபுரம் 91 அடி உயரத்தையும், 40 அடி அகலத்தையும் கொண்டது என ஆலய வண்ணக்கர் தம்பிராசா சீனித்தம்பி தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு 11 அடி ஆழத்தில் அத்திவாரம் இடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுர அமைப்புப் பணிகளிற்கு என இதுவரை 13 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. (சு-60)

## மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்கியிருந்தோர் வேறிடங்களிற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டனர்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் மானிப்பாய் கட்டுடை முகாம், மானிப்பாய் அதிகார் செல்லமுத்து முகாம் ஆனைக்கோட்டை முகாம் என்பவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலைகளில் தற்போது க.பொ.த உயர்தரப் பரீட்சை நடை-பெறுவதாலும் அண்மையில் இப்பாடசாலையில் மாணவர் ஆசிரியர்களுக்கும் இங்கு தங்கியிருந்த மக்களுக்மிடையில் ஏற்பட்ட கைகலப்பினைத் தொடர்ந்தும் யாழ். அரச அதிபார் சண்டிலிப்பாய், பிரதேச செயலர், மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் உத்தரவுக்கிணங்க இவர்கள் மேற்படி முகாம்களுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (க-120)

இன்று ஒரு தகவல்

# சிறந்த பழக்கவழக்கங்கள் நற்பிரஜைகளை உருவாக்கும்

ஒரு காலத்தில் தாய்ஒருத்தி தனது பிள்ளையை சந்தைக்கு காவிச்செல்வது வழக்கம். ஒரு முறை சந்தைக்கு பிள்ளையை காவிச்சென்ற தாய் ஒருபழக்கடையை தாண்டிச் சென்றார். அப்பழக்கடையைத் தாண்டிச் சென்ற பின் தனது மகனின் கையில் பழம் ஒன்று இருப்பதை கண்டார்.

தாய் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். தனது மகனிடம் 'நீ மிகவும் கெட்டிக்காரன். மகனே எங்கிருந்தாலும் நீ பிழைத்துக் கொள்வாய் எதிர் காலத்தில் நன்றாக இருப்பாய் என்று தெரிகிறது' என்றாள். மீண்டும் மீண்டும் மகன் தாயுடன் சந்தைக்கு வந்தான். ஒருவரிற்கும் தெரியாமல் சிறு சிறு திருட்டுக்களில் ஈடுபட்டான். பையன் வளர்ந்தான். அவன் பல பொருட்களைக் களவெடுப்பதற்குசந்தைக்கு சென்றான்.

சில வருடங்கள் கழிந்தன. பையன் வாலிப வயதை அடைந்தான். ஒரு நாள் வங்கியை கொள்ளையடிக்க நினைத்தான். வங்கியைக் கொள்ளையடிக்க தீர்மானித்த அவன் ஆயுதங்கள் சகிதம் உள் நுழைந்தான். வாசலில் நின்ற காவலாளிகள் அவன் நுழைவதைத் தடுத்தனர். காவலாளிகளிற்கும்அந்த வாலிபனிற்கும் இடையே சண்டை மூண்டது. சண்டையின்போது ஒரு காவலாளியை அவன் சுட்டுக் கொன்றான். பொலிஸ் வாலிபனைக் கைது செய்து வழக்கு மன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தினர். தலைமை நீதிபதியால் அவன் குற்றவாளி என்று காணப்பட்டு மரணதண்டனை அளிக்கப்பட்டது மரணதண்டனை கொடுக்கப்படும் நாள் வந்தது. அவன் அச் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியிடம் ஒருவேண்டுகோள் விடுத்தான்

சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி அவன் வேண்டுகோள் என்ன என்று அவனிடம் கேட்டார். அதற்குஅவன் தனது தாயைத் தான் சாகும் முன் காணவேண்டும் என்று தெரிவித்தான்.

இறுதியில் இவன் தாயைக் காண விரும்புகிறானே தாய்க்கு இறுதிமரியாதை

சிறந்த உதாரணமாகும். மனதை நல்ல வழியில் பயிற்றுவிக்க வேண்டும். மனதைக் குரங்குக்கு ஒப்பிடுவார்கள். அதற்குப் பின்வரும் கதை சான்று பகர்கின்றது.

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்து வந்தார்.

அந்தக் குரங்கு ஒரு சுவரோரமாக ரொம்ப சாதுவாக உட்கார்ந்திருக்கும். அப்படி இருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒருகுச்சியால் அதற்கு இரண்டு அடிகொடுப்பார் அடியை வாங்கிக் கொண்டு குரக்குக் குட்டி அங்கே கிடைக்கும் ஆகாரத்தையும் சாப்பிட்டுக்கொண்டு ரொம்ப சாதுவாக காலம் தள்ளிக் கொண்டிருந்தது.

அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். அவர் தினமும் ராஜா கூடவே இருப்பார் ............போவார் ........ ... வருவார் .........

அரசன் அந்தக் குரங்கை அடிப்பதுமந்திரியின்மனதிற்கு மிகவும்சங்கடமாக இருந்தது. அதனால் மந்திரி அரசரைப் பார்த்து 'இது என்ன அநியாயம் ...... வாயில்லா ஜீவன் ... அதுவுமில்லாது ரொபப சாதுவாக அமர்ந்திருக்கிறது. அதைப் போய் தினமும் அடிக்கிறீர்களே! என்றார். 'சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு நான் மரியாதை கொடுக்கிறேன். இன்றிலிருந்து இந்தக் குரங்கை அடிப்பதை நிறுத்தி விடுகிறேன்' என்றுகூறிய அரசன் அதன்பின் அடிப்பதை நிறுத்தி விட்டான்.

அதன் பின் ராஜாவும் மந்திரியும் அந்தப் பக்கம் வருவார்கள் ...... போவார்கள் ராஜா அடிக்க வில்லை என்று தெரிந்ததும் குரங்கு கொஞ்சம் அசையஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது அப்புறம் ராஜா கிட்டே ஓடி வந்து கொஞ்ச ஆரம்பித்தது! அதற்கு அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது. அதற்கும் அடுத்த நாள் ராஜா தோளில் ஏறி உட்கார்ந்து ஒரு குச்சியால் ராஜாவின் காதில் குத்த

## கலாசாலை அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையில் இணைக்கப்பட்ட விரிவுரையாளராக பணிபுரிவதற்கு ஆங்கிலப்பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மேற்படி கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி, கல்வித் தகைமை உட்பட விபரங்களை அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி என்ற முகவரிக்கு எதிர் வரும் 13 ஆம் திகதி முன்பதாக அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பங்கீட்டு அட்டைக்கு 5லீற்றர்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப.நோ.கூ சங்க கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டை மூலம் 5லீற்றர்மண்ணெண்ணெய் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (க-120)

## கூட்டணி தெரிவிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கோ அல்லது தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கோ விரோதமாக நடந்து கொள்ளமாட்டாது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராட்டத்தை என்றும் கௌரவித்தும் மதித்தும் தான் நடந்து கொள்ளும் என்றும் தெரிவித்தார். (ந)

## வன்னியில் மிதிவெடி இருவர் காயம்

(வவுனியா)

கிளிநொச்சி பனங்காமம் மற்றும் கனகராஜன் குளப் பகுதியில் மிதிவெடியில் அகப்பட்டு இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலகிருஸ்ணன் நவநீதன் (வயது 19), நடராஜா சத்தியசீலன் (வயது 29) என்பவர் கண்பார்வை இழந்த நிலையிலும் வவுனியா வைத்

## நல்லூரான் திருவடிக்கு - 03



### வல்லமை மிக்க வேலா!

நல்லையில் கோயில் கொண்ட
நாதனே கந்த வேளே!
வல்லமை மிக்க வேலா!
வள்ளிதெய் வானை நாதா!

அல்லல்கள் தீர்த்து அமரர்க்கு
அபயமே அளித்த பாலா!
தொல்லைகள் தீர்ப்பாய் நல்ல
தீர்வினைத் தந்தே இங்கு;

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### அமைதி வேண்டும் முருகா

தென்றல் அழுதிடும் தேசத்தில்
திரைகள் விலக்கிடு முருகா
மக்கள் அழுதிடும் மண்ணில்
மகிழ்ச்சி பொழிந்திடு முருகா

யுத்தம் முழங்கிடும் பூமியில்
அமைதி தந்திடு முருகா
சத்தம் குவிந்திடும் பூமியில்
சமாதானம் தந்திடு முருகா

அமைதி வேண்டும் முருகா
அழுகை வேண்டாம் முருகா
உரிமை வேண்டும் முருகா
ஓலம் வேண்டாம் முருகா

-நல்லை அமிழ்தன்-

### அகரவரிசையில் அழகனை துதிப்போம்

அல்லல் அகற்றிடுவான்
ஆறுமுகன் குகன்
இருகையும் தொழு மடியார்க்கு
ஈடிலா பேரருள் தருவான்
உயர்ந் தோர்க்கும் தாழ்ந் தோர்க்கும்
ஊரில் உள்ள யாவர்க்கும்
என்றும் நல்வரம் தருவான்
ஏற்றமுடன் வேண்டிடவே
ஐங்கரன் தம்பியே அழகு முருகன்
ஒப்பிலா மாமணியாய் எம்மனத்து
ஓங்குநன்னெறி ஒளிகாட்டி
ஔவை வழியில் அருளது பெறவே
அடியாரை அணைத்திடுவான்
அன்போடு நல்லூர் அமர்ந்திருப்பவனே

மணி

இறுதியில் இவன் தாயைக் காண விரும்புகிறானே தாய்க்கு இறுதிமரியாதை செய்ய விரும்புகிறான் போலும் என்று சிறைப் பொறுப்பதிகாரி நினைத்தார். அவனின் வேண்டுகோள் பொறுப்பதிகாரிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவனது விருப்பத்தை நிறைவேற்றுவதாக அவர் கூறினார். உடனே தாய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தாய் வந்ததும் மகன் மிகவும் கோபம் அடைந்தான். தாயைப் பார்த்து கூச்சலிட்டான். 'அன்று நீ என்னைச் சந்தைக்குத் தூக்கிச் சென்ற நாள் என்னைக் கடிந்து ஏசி களவு செய்யாதே என்று கற்பித்திருந்தால் இந்த நாள்வந்திராது' என்று கலங்கி நின்றான்.

நாம் நல்ல பழக்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் அது விபரீதத்திற்கு இட்டுச் செல்லும் என்பதற்கு மேற்குறிப்பிட்டகதை

நாள் ராஜா தோளில் ஏறி உட்கார்ந்து ஒரு குச்சியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது.

பார்த்த மந்திரி ராஜா என்ற மரியாதை கூட இல்லாமல் குரங்கு இப்படிச் செய்கிறதேஎன்று நினைத்து அந்த குச்சியைப் பறித்துஎறிந்தார். மந்திரி அக் குச்சியை பிடுங்கி குரங்கை அடிக்கத் தொடங்கி விட்டார்.

இப்போது ராஜா அந்த மந்திரியைப் பார்த்து 'இதையே தான் நான் ஆரம்பத்திலேயே செய்தேன் என்றார். மனமும் ஒரு குரங்கு மாதிரித் தான் இக் கதையும் முதற்கதையும் ஒரு சிறந்த உண்மையை தெளிவு படுத்தி நிற்கிறது. நாம்எமதுமனதை எப்படிப் பழக்கப்படுத்துகிறோமோ அதன் படியேஎமது மனது ஆகிறது என்பதே அது எனவே நற்பழக்கங்கள் அவசியம் தேவை.

தென்கச்சி சுவாமிநாதன்

வர் கண்பார்வை இழந்த நிலையிலும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7)

## நாடகப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பாலலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட நாடகப் பயிற்சி இம் மாதம் 15 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கலாசாலை சுப்பிரமணிய மண்டபத்தில் விரிவுரையாளர் குழந்தை சண்முகத்தின் வழிப்படுத்தலில் இந் நிகழ்வு இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளனர். (க)

## சத்துணவுகள் வழங்கல்

(இருபாலை)

அண்மைக்கால அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வலி கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதி முகாம்கள், பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு ஈ.பி.டி.பி. யினரால் சவக்காரம், பென்சில், பேனா, கொப்பிகள் மற்றும் சத்துணவுகள் வழங்கப்பட்டதாக கட்சியின் வலி கிழக்கு அமைப்பாளர் எஸ். ரவி தெரிவித்துள்ளார்.

மணி

---

## அவனியிலே உந்தன் துணை வேண்டும்

புள்ளிமயில் மீதேறி வரவேண்டும் — முருகா
புதியதொரு வாழ்வதனைத் தரவேண்டும்
அள்ளியுன் அருளைப் பெறவேண்டும் — முருகா
அவனியிலே உந்தன் துணை வேண்டும்;

மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்

## புலம்பெயர்ந்த மாணவருக்கு சீருடை தென்.இந்தியதிருச்சபையினர் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலங்களில் நடைபெற்ற வன்செயல்கள் காரணமாக தென்மராட்சி யாழ். மாநகரசபை ஆகிய பகுதிகளில் இருந்து புலம் பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும், முகாம்களிலும் தஞ்சமடைந்து வசித்துவரும் மாணவர்களுக்கும் பாடசாலை செல்வதற்கான சீருடைகளை தென்னிந்திய திருச்சபையினர் தைத்து வழங்கி வருகின்றனர்.

இதன் முதற் கட்டமாக, வட்டுக்கோட்டை தொகுதியில் புலம்பெயர்ந்து கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு பாடசாலை ரீதியாக கடந்த 26ம் திகதி ஒரு தொகுதி சீருடைகள் வழங்கப்பட்டது.

வருகின்ற 15ம் திகதி இன்னுமொரு தொகுதி சீருடைகள் நவாலி, ஆனைக்கோட்டை, குடத்தனை, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் புலம்பெயர்ந்து வாழும் மாணவர்களுக்கு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களினால் வழங்கப்படவுள்ளது; (அ

## விபத்தில் சிக்கியவர்மரணம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி இடம் பெற்றவீதி விபத்தில் படுகாயமடைந்து அதிதீவிர சிகிச்சை பெற்று வந்த சரவணன் ஜெயராஜா (வயது37) மரமணடைந்துள்ளார் (உ-12)

# கடற்கொள்ளையர் 20 பேர் சீனப் படையினரால் கைது

## 11 பேர் பிலிப்பைன்ஸ் நாட்டவர்

(பீஜிங்)

இந்தியாவிற்கு பெருமளவில் மரக்கறி எண்ணெய் ஏற்றிவந்த கப்பலை கடத்திய 20 கடற்கொள்ளையர்கள் சீனாவின் கடலோர பாதுகாப்புபடையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கப்பல் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான குளோபல் கப்பலென்றும் தெரிவிக்கப்படுகிறது. இக்கப்பலில் கைதுசெய்யப்பட்டவர்களில் 11 பேர் பிலிப்பைன்ஸ் நாட்டவர்களென்றும் 9பேர் மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்களென்றும் தெரிய வருகிறது.

தற்போது இக்கப்பல் சீனாவிடம் இருப்பதாகவும் விசாரணைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## கால் பந்தாட்ட இடத் தெரிவில் ஆசிய ஆபிரிக்க உறவு முறிவு

(பிரிட்டோரியா)

ஆபிரிக்க கால் பந்தாட்ட சம்மேளனம் ஆசிய கால் பந்தாட்டத்துடனான தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டது.

2 ஆயிரத்து 6 ஆம் ஆண்டில் உலகக்கோப்பைப் கால் பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுகின்ற இடத்தைத் தீர்மானிப்பதற்காக நடந்த வாக்களிப்பில் ஆசிய கால் பந்தாட்ட சம்மேளனம் எடுத்த நிலைப்பாட்டிற்கு எதிராக ஆபிரிக்க கால் பந்தாட்ட சம்மேளனம் ஆசிய கால் பந்தாட்ட சம்மேளனத்துடனான தொடர்புகளைத் துண்டித்திருக்கிறது என அறிவிக்கப்படுகிறது. (து)

### சில தினங்களில்

இன்னும் சில தினங்களில் உலக தரிசனப் போட்டிக்கான விதிகளும், விபரங்களும் வெளிவர இருக்கின்றன. தொடர்ந்து வாசியுங்கள்.

## இலங்கையில், இந்தியப்படை நடவடிக்கைக்கு சோனியா மன்னிப்புக்கோரவேண்டும் - கோயம்புத்தூரில் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

இலங்கையில், இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு சோனியாகாந்தி மன்னிப்புக்கோரவேண்டும் என அவருக்கு கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம்செய்ய முயன்றவர்கள் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தனித்தமிழர் சேனை மற்றும் அகில இந்திய 'போர்வேட்புளக்' ஆகிய கட்சியைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

கடந்த சனியன்று, அகில இந்திய காங்கிரஸ்கட்சி தலைவர் சோனியாகாந்தி, காங்கிரஸ்கட்சி சார்பாக கோயம்புத்தூரில் நடைபெறவிருந்த காமராஜர் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்வதற்காகச் சென்றபோது கோயம்புத்தூர் விமானநிலையத்தில் கூடிநின்று பலர் ஆர்ப்பாட்டம்செய்தனர்.

1987 ஆம் ஆண்டு, இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியும் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைசென்ற இந்திய அமைதிகாக்கும் படையினர் அங்கு தமிழர்கள்மீது புரிந்த அடாவடிச் செயல்களுக்கு சோனியாகாந்தி மன்னிப்புக் கோரவேண்டும்எனவும் கூறி, கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவந்துள்ளது. (உ)

## உலக தரிசனம்

## இஸ்ரேல் லெபனான் எல்லைப் பகுதியில் அமைதிப்படை லெபனான் மக்கள் நல்லாதரவு

(லண்டன்)

இஸ்ரேல் லெபனான் எல்லைப் பகுதியில், பெருமளவு ஐக்கிய நாடுகள் அமைதிப் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

ஹெய்ரோவில் இருந்து அனுமதி கிடைத்ததையடுத்து இஸ்ரேல் லெபனான் எல்லை நெடுகிலும் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 23 வருடங்களாக இஸ்ரேல் கட்டுப்பாட்டில் இருந்த இவ் எல்லைப் பகுதி இரு மாதங்கள் முன்பு இஸ்ரேலிடம் இருந்து லெபனானிடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து ஹிஸ் புல் முஜாகுதீன் தீவிரவாதிகள் இந்த எல்லைப் பகுதியில் தரித்திருந்தனர். இப்போது ஐ. நா. அமைதிப்படையினர் இப்பகுதியைப் பொறுப்பேற்றதையடுத்து ஹிஸ்புல் முஜாகுதீன் அமைப்பினர் விலகி வருகின்றனர்.

தேசமயம் ஐ. நா. அமைதிப்படையினர் இஸ்ரேல் லெபனான் எல்லைகளில் கடமைக்கு வந்ததையடுத்து எல்லைப்புறத்தில் வாழும் லெபனான் மக்கள் மக்கள் பெரும் நிம்மதிடைந்துள்ளனர். (உ)

## பிரித்தானிய அரசின் பக்கிங்ஹாம் "போல்றூம்" மண்டபம் மக்கள் பார்வைக்கு திறக்கப்படும்

(லண்டன்)

பிரித்தானிய அரசின் பக்கிங்ஹாம் மாளிகையிலுள்ள "போல் றூம்" மண்டபத்தினை எலிசபெத்மாகாராணி பொதுமக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்து வைக்கவுள்ளார்.

1856 ஆம் ஆண்டு இந்த "போல்றூம்" மண்டபம் விக்ரோறியாமகாராணியால் யுத்தவெற்றியைக்கொண்டாடும் முகமாக கட்டப்பட்டது.

கோடை கால ஆரம்பத்தின் பொருட்டு பார்வையாளர்களுக்காகத் திறந்து விடப்படும் "போல்றூம்" பகுதி ஒக்டோபர் மாதம் மீண்டும் மூடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பக்கிங்ஹாம் மாளிகையிலுள்ள மிகப் பெரிய விருந்தினர் மண்டபமும் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## தென்கொரிய செய்தியாளர்கள் வட கொரியா பயணமாகினர்

வடகொரிய அரசாங்கம் தென்கொரிய ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விட்டிருக்கிறது.

அண்மையில் நடந்தேறிய வடகொரிய, தென்கொரிய அமைச்சர்களின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களை அடுத்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனையடுத்து தென் கொரிய 40செய்தி ஊடகவியலாளர்கள் நேற்று இயோலிவிருந்து புறப்பட்டுச் சென்றார்கள்.

இவர்கள் அரசியல் தலைவர்கள் உட்பட பலரையும் சந்திப்பார்கள் என்றும் தெரி

## பெர்ணாண்டஸ் "பகல்காம்" விரைவு

(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தில், தீவிரவாதிகளால் அமர்நாத் யாத்திரிகர்கள் கொல்லப்பட்ட பகல்காம் பகுதியை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் சென்று பார்வையிட்டார்.

இராணுவத்தினர், எல்லைக்காவல் படையினர் மற்றும் மாநில காவல்துறையினருடன் பாதுகாப்புக்களை மேலும் அங்கு பலப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை பெர்ணாண்டஸ் நடத்தியுள்ளார் [உ]

## செய்திப்பரல்

★ பிஜிப் புரட்சித்தலைவர்கள் தங்கள் குடும்பத்தவர்களைச் சந்திக்க இராணுவம்அனுமதித்துள்ளது.

★ பிஜி சுதந்திரமடைந்தபின இற்றை வரை எவருக்கும்மரண தண்டனை வழங்கப்படவில்லை.

★ கர்நாடகமாநிலத்தின் தமிழ் விரோதக் கொள்கைகளைக் கண்டிக்கும் முகமாகவே நடிகர் ராஜ்குமாரை கடத்தியதாகவீரப்பன் கூறுகிராராம்.

★ இந்திய எந்த ஒருகிறிக்கெட் வீரருக்கும் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் தைரியம் வரவில்லையொன்று விளையாட்டுத் துறை அமைச்சர் கூறுகின்றார்.

★ ஈரான் ஈராக் போரின் போது கைது செய்யப்பட்டுள்ள மேலும் 720 பேரை இன்னும் சில நாட்களில் ஈரான் விடுதலை செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது. (து)

சீனாவில்

அமைச்சர்களின் சர்வாதிர முக கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களை அடுத்து இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்

இவர்கள் அரசியல் தலைவர்கள் உட்பட பலரையும் சந்திப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

சீனாவில்

றது. (து)

# ரஷ்யாவில்,மீண்டும்கே.ஜி.பி உளவுத்துறை அதிபர் புட்டின் இத்தகவலை மறுப்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில்மீண்டும்கே.ஜி.பி உளவுத்துறை உருவாக உள்ளது.

அமெரிக்காவிலுள்ளசி:ஐ.ஏ உளவுத்துறை போன்று முன்னைய சோவியத் ஒன்றிய கே.ஜி:பி உளவுத்துறை மீண்டும் ரஷ்யாவில் உருவெடுக்க இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன;

இந்த உளவுத்துறையின் தலைவராக இன்றைய ரஷ்ய அதிபர் விளாடிமிர்புட்டின் செயலாற்றுவர் எனத்தெரிய வருகிறது.

இதே வேளை,கே;ஜி பி எனும் உளவு அமைப்பு ரஷ்யாவில் நிறுவப்படவுள்ளதாக வெளியான செய்திகளை ரஷ்ய அதிபர் புட்டின் மறுத்துள்ளார்.

(உ-து)

# இருவேறு வெடிவிபத்துக்களில் 50 இற்கும் மேற்பட்டோர் பலி

(பீக்இங்)

சீனாவி அடுத்தடுத்து இடம்பெற்ற இருவேறு பட்டாசுத் தொழிற்சாலை விபத்துக்களில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்,

அடிக்கடி பட்டாசுத் தெழிற்சாலைகளில் விபத்து ஏற்படுவதை தடுக்கும் வகையில் சீன அரசு தற்போது வெடித்தொழிற்சாலை தொடர்பான இறுக்கமான புதிய சட்டங்களை இயற்றியுள்ளது.

சீனாவின் தென்மாகணத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 30 தொழிற்சாலை ஊழியர்கள் கொல்லப்பட்டனர்.பலர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின் சில நாட்கள் கழிந்த நிலையில் சீனாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சட்டவிரோத வெடிப்பொருள் களஞ்சியத்தில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 21 பேர் கொள்ளப்பட்டும்,26 பேர் பாடுகாயமடைந்துமுள்ளனர்.

(உ-து)

# மொலுக்காஸ் தீவுக்கு அமைதிப்படை

(ஜகார்த்தா)

இந்தோனேசிய மொலுகாஸ் தீவுகளில் இடப்பெற்று வரும் வன்முறைகளைத் தடுக்க அங்கு அமைதிப்படை அனுப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது;

இராணுவம் அல்லாத சர்வதேச பொலிஸ் படை ஒன்றினையே அங்கு அமைதிப் படையாக அனுப்பப்பட வேணடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

# பிரான்ஸ் கடற்படையுடன் இணைந்து இந்தியக் கப்பல் ஐ.என்.எஸ் மைசூர்பயிற்சி

(புதுடில்லி)

இந்தியாவின் அதிநவீன போர்க்கப்பல் ஐ.என்.எஸ் மைசூர் அடுத்த வாரம் பிரான்ஸ் கடற் படைக்கலங்களுடன் சேர்ந்து பெரிய தொரு பயிற்சியில் ஈடுபடவிருக்கிறது.

அணுவாயுதகிருமி,ஆயுதத் தாக்குதல்களுக்கு இடையேயும் இயங்கக்கூடிய இந்தப் போர்க்கப்பல் டெ ஜிபூட்டி என்ற இடத்தில் பிரான்ஸ் கப்பல்களுடன் இணைந்து நடுக்கடலில் பயிற்சி மேற்கொள்ளும்; இரு நாடுகளுக்கிடையேயும்குறிப்பாக கடற்படையில் ஒத்துழைப்பை வளர்க்கவும் உலக அளவில் பேரிடர்களைத் தவிர்க்கவும் இந்தப்பயிற்சி வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது;

(து)

# மிக்விமானம் வீழ்ந்து நொருங்கியது

(புதுடில்லி)

இந்தியாவில் மிக்விமானம் ஒன்று நேற்று விழ்ந்து நொருகியது.

ரஷ்ய தயாரிப்பான மிக் போர் விமானம் பாலம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்துக்குள் வீழ்ந்து நொருங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் விமானம் முற்றாகச் சேதமடைந்ததுடன் விமான ஓட்டியும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது;

# ்காரிக்கை

(பெங்களூர்)

சந்தனக் கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைவிடுவிக்க வேண்டுமாயின் சில நிபந்தனைகளைப் போட்டுள்ளார் என்று செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்த ஊடகங்கள் மேலும் தெரிவிக்கையில் வீரப்பன் தனக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். கர்நாடக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டுத் தமிழர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை விடுத்திருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது;

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

- குறள்

வலம்புரி

## சட்டிபிடித்தவன்.

பாடு பட்டவன் பட்டத்துக்கு இருக்கவேணும் என்பது கிராமிய பழமொழி அனுபவ வாய்மொழியும் கூட. ஏன் அறமும் கூட. என்று சொன்னால் மிகவும் பொருத்தமாயிருக்கும். காலம் காலமாக இலக்கினின்றும் பிறழாதவர்கள் பேச்சு வார்த்தை மேசைக்கு வந்தால் தான் ஆரத கறி சோற்றுக்குப் பாயாசம் குடித்தது போல இருக்கும்.

வயிற்றுப் பிழைப்புக்கு காலம் கடத்துபவர்கள் எதையும் செய்யலாம் இலட்சிய வேட்கை கொண்டவர்கள் அவ்வாறு செய்ய முடியாது. அதனைக் கடினப் போக்கென்றோ பிடிவாதமென்றோ பிதற்றமுடியாது.

இருந்த மனையைக் குலைத்தலைஎவனும் விரும்பான். இதுபோன்றதே வடக்கும் இழக்குமான இரு அலகு கொண்ட ஒரு கூறு காலம் காலமாக அனுபவித்த மண்ணின் உரிமையை மாற்றானிடம் அடகு வைப்பதென்பது கேலிக்கூத்து. இவற்றை முன்னிறுத்தியேதற்கொடையாளிகள் தக்க நிலை அடையும் வரை தலையசைக்காதிருக்கின்றனர்.

ஆண்டாண்டு காலம் நடந்த அரசியல் வியாபாரத்தால் பொட்டிழந்து, பொருள் இழந்து இருக்கும் இல்லமிழந்து, நிம்மதியற்ற அகதி வாழ்வில தோய்ந்திருக்கும் மக்களுக்கு பூரண நிம்மதியும் நிலையானதொரு வாழ்வும் பிறந்தமண்ணிலே வேண்டுமெ என்று அடம் பிடிப்பது ஒன்றும் தப்பில்லை.

சுட்டகை மாறாது, சட்டியும் கறியும் இறக்கி வைக்க முனைந்து நிற்பதால் இன்று தமிழினம் இன்னல்களுக்கு மத்தியிலும் வாழ்கிறது. ஆத்திரமும் அத்தரமும், வரும்போது ஏதோ அவங்களாலை தான் தமிழன் உயிர் வாழ்கிறான் என்ற பெட்டைக் கேரல்கள் கேட்பது உண்மையே.

எனவேதான்தேர் வடித்த சிற்பி வெள்ளோட்டத்தில் வீதியுலா வருவது போல உரியவர்கள், உழைப்பாளிகள் உள்ளடங்கிய சமாதானமே நிலைத்து நிற்கக் கூடியது. இனிமேலும் துயரம் நீண்டு கொண்டு போகாது நிம்மதி பிறக்க வேண்டும். பிறக்கும் நிம்மதி நிலையானதாக இருக்கவும் வேண்டும். பட்ட இரணங்கள் ஆற எடுக்கும் காலம் நீளும். அப்படி இருக்க மேலும் துயரத்தைத்தாங்கும் நிலையில் மக்களில்லை. எனவே உரியதை உயர்வாகச் செய்து முடிக்கட்டும்.

அன்புடன் ஆசிரியர்

# சமயப் பற்றையும் அதன் புனிதத்தையும் எமக்கு ஊட்டுபவர்கள் அந்தணர்களே

## துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அந்தணப் பெருமக்கள்சிராகவும் சிறப்பாகவும் வாழவேண்டும் நன்கு படித்துப் பட்டம்பெறவேண்டும். அவர்களை போற்றி, வாழ்த்தி மதிக்கின்ற சமூகம்தான்உய்தி பெறும்.

சிறந்த சமய அறிவும், கடவுள் நம்பிக்கையும் கொண்ட ஒரு சமுதாயம் தான் வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ இயலும். இந்த வகையில் சமயப் பற்றையும் அதன்புனிதப் பண்பையும் எமக்கு ஊட்டி, உணர்த்தி நிற்பவர்கள் அந்தணப் பெருமக்களே.

நேற்று யாழ். வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையில் இடம்பெற்ற அமரர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்களின் இருபத்தைந்தாவது வருட நினைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; போற்றி வணங்க வேண்டிய அந்தணப் பெருமக்களில் சிலர் இன்று பெரும்துன்பங்களுக்குஆளாகி வருகின்றனர் இருப்பதற்கு வீடற்று அலைகின்ற நிலை கூட இங்கு உண்டு இது ஒரு உயர்ந்த பண்புள்ள சமுதாயத்திற்கு அழகான செயலாகா,

அவர்களை ஆலயங்களுக்கு அருகிலேயே இருப்பிட வசதி செய்து கொடுத்து அமர்த்தும் அரிய பணியை வழங்க நாம் முன்வர வேண்டும் இறைவனுக்கு அடுத்தபடியானவர்கள் அந்தணர்கள் என்பதை நாம் எந்தக்கணமும் மறந்து விடலாகாது இதை ஒரு கலாசாரப் பண்பாக நாம் மேற்கொள்ள வேண்டும்.

பல்வேறு கலாசார நாகரிகங்கள் சந்திக்கும்போது எந்த நாகரிக கலாசாரம் மேலோங்கி நிற்கிறதோ அதுவே மேலோங்கி நிற்கும் அதுவே பலரையும் தன்வசப் படுத்தும்.

எங்கள் கலை எங்கள்பண்பாடு என்று சொல்வதில் பலனில்லை. கால ஓட்டத்திற் கேற்றவாறு அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி, அந்நிய கலாசாரங்களைச் சந்திக்கும்போது எங்கள் கலாச்சாரம் மேலோங்கும் என்ற உணர்வுஇருக்க வேண்டும்.

செயற்பாடுகள் மேலோங்கி நிற்கும்வகையில், உட்பொருள் வெளிச்செயற்பாடுகளை முன்னெடுத்தால் எங்கள் கலாசாரம் மேலோங்கிநிற்கும்.

நாம் முன்னெடுக்காதுவிட்டால் பிறகலாசாரம் மேலோங்கும்.

யாழ். பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ். நாவலர்வித்தியாலய அதிபர் ஐ. துரைராஜாஉட்பட பிரமுகர்கள்பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(க-உ-03)

# வாழ்க்கையில் சாதனை செய்யும் பருவம் வாலிபம் அதைத் தவறவிட்டால் மிஞ்சுவது வேதனையே

'வாழ்க்கையே சிலபேருக்கு நாடகமாகத் தோன்றுகின்றது. நாடகமே சிலபேருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகின்றது' ஆம் இது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட யோகம். இதுஎல்லோருக்கும் ஒருவழியில்அமைவதுஇல்லை. இது பலவழிப்பாதை இதில் வருகின்ற ஓர் சந்ததிதான் வாலிபம்.

வாழ்க்கையும், வாலிபமும் என்று இந்தக் கட்டுரையைப் பூரணப்படுத்துவதற்கு வாழ்க்கை என்பது பற்றி பல வகையில் ஆராய வேண்டி உள்ளது. அதே நேரம் இன்றைய சமூகத்தோடு ஒட்டியும் ஆராய வேண்டி உள்ளது.

அந்த வகையில் எமது சமூகம் சமயம் என்பதுஇன்று பல வகையான இக்கட்டான சூழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. எமது சமயத்தைப் பொறுத்த வரையில் அழிந்து கொண்டு செல்கின்றது என்று கூற முடியாது. ஆதரிப்பார் யாருமின்றித் தூங்கிக்கிடக்கிறது என்றே கூற முடியும். உண்மையிலே மனிதன் என்கின்றபோது மனித வாழ்க்கை என்கின்றபோது பல்வேறு கடமைகள், எமக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லோரும் ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஏன் இந்த மண்ணில் பிறந்தோம்? எதற்காக எமக்கு இந்தப் பிறப்பு? நாம் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் இதற்கிடையில் நாம் என்ன செய்தோம்? எமது கடமை என்ன? எமது எதிர்காலம் என்ன? ஆம் இந்தக் கேள்விக்கான விடைதான் இந்தக் கட்டுரையில் பூர்த்தியாக அமைகின்றது.

### அகதி முகாம் வாழ்வு

எமது சமூகத்தை ஆழமாக உற்றுநோக்கினால் மூவேந்தர் ஆண்டு வந்த எமது பரம்பரை என்ன? எமது பண்பாடு என்ன? எமது கலாசாரம் என்ன? உண்மையிலே இது ஓர் வேதனைக்கு அப்பாற்பட்ட ஒன்று. அபிஷேகம் நடக்க வேண்டிய ஆண்டவன் இல்லங்கள் ஆயிரம் அனாதரவாய்க் கிடக்கின்றது. அனைத்தும் அறிந்து அறிஞர்களாய் உருவாக்க வேண்டிய பிஞ்சுகள் அகதி முகாங்களில் அழுதுகொண்டு இருக்கின்றனர், அறுவடையில் அழுதுண்டு அன்றலர்ந்த எமது சமூகம் அந்நிய நோய்களால் அழுகிச் சாகின்றது. யார் இதைக்கேட்பார், யார் இதை அறிவார், எவருமே எமக்கில்லை. எவருமே கேட்பதற்கு இங்கு இடமுமில்லை. ஏனெனில் இது எமது சமூகம். இது எமது கலாசாரம். இது எமது பண்பாடு இவைகளை நாம் தான் தட்டிப் பார்க்க வேண்டும். அதற்கு எதிர்காலத்தில் தட்டியெழுப்பும் தூண்கள் தான் முன்வர வேண்டும். சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் சொல்கின்றார்.

''இரும்புமனம் கொண்ட 100 இளைஞர்களை எனக்குத் தாருங்கள் இந்த இந்தியாவையே இருகரம் கூப்ப வைப்பேன்.'' என்று இவர் ஏன் இளைஞர்களைக் கேட்கின்றார் உண்மையில் இளைஞர்களால் சாதிக்க முடியாததென்று எதுவுமே இல்லை. சிலர் நினைக்கக் கூடும் ''எனக்கு வயது போதாது அனுபவம் இல்லை என்று'' உண்மையிலேயே சாதனைகளைச் சாதிப்பதற்கு வயது ஓர் தடைக்கல் அல்ல. ஆபிரகாம்லிங்கனின்வயது என்ன? அன்னை தெரேசாவின் வயது என்ன? தியாகத்துடன் கூடிய திடகாத்திர மனது உள்ளவனுக்கு முடியாது என்று எதுவுமே இருக்காது இங்கு தான் வாலிபமும் வாழ்க்கையும் சந்திக்கின்றது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் வாலிபம் ஒரு முக்கியமான பருவம். இதில் தான் அவனது எதிர்காலமே தங்கியுள்ளது. இதில் தான் இலட்சியம் என்பது தலை தூக்குகின்றது. மனிதனாகப் பிறந்த எவனுக்கும் ஓர் இலட்சியம் உண்டு. களவெடுப்பவனுக்கும், ஓர் குறிக்கோள் உண்டு, கடவுளைத் தொழுபவனுக்கும் ஓர் குறிக்கோள் உண்டு. காமத்தில் மூழ்குபவனுக்கும் ஓர் குறிக்கோள் உண்டு. காசிக்குச் செல்பவனுக்கும் ஓர் குறிக்கோள் உண்டு. ஆனால் அவனது குறிக்கோளின் வேறுபாட்டை பொறுத்தே அவனது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது.

''சிலரது இலட்சியங்கள் சுயநலத்துக்காக பிற நலத்தைக் கெடுத்து தானாக உருவானது'' சிலரது இலட்சியங்கள் பிறர் நலத்துக்காக சுயநலத்தை தியாகம் செய்து தானாக உருவாகிக்கொள்வது. சிலரது இலட்சியங்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகின்றது. சிலரது இலட்சியங்கள் சந்தர்ப்பம் சூழ்நிலைகளினால் சாதிக்க முடியாமல் போகின்றது. ஆம் அது உண்மைதான். மனிதனுடைய வாழ்க்கை என்பது ஒரு குறிப்பிட்ட திசையில் செல்வதல்ல. எத்தனையோ சிக்கல்கள் எத்தனையோ சோதனைகள் மத்தியில் வீறு நடை போடுவது தான் வாழ்க்கை. மனிதனுடைய வாழ்க்கையில் சிலவற்றைச் சாதிக்கும் போது சில சோதனைகள் எம்மை வந்து முற்றுகையிட்டு விடுகின்றது. என்னைப் பொறுத்த வரையில் உண்மையான மனத்திடகாத்திரத்துடன் சாதிக்க விரும்புபவனுக்கு இந்தஇடத்தில் தான் சுவையான வாழ்க்கைஆரம்பமாகின்றது. முரண்பாடுகளினூடாக சிலவற்றை நாம் சாதிக்க முற்படுகின்ற போதுதான் அதன் முற்றுப்புள்ளியைப் பெற்று விடுகின்றோம்.

வாதிக்கு சோதனைகள் வந்து தான் தீரும். அதற்காக எமது இலட்சியத்தை கைவிடலாகாது. இதில் நீங்கள் கூறலாம் 'எழுத்தில், பேச்சில் எதையும் கூறிவிட்டு செல்லலாம். ஆனால் அதை செயல்படுத்துவதில் தான் முரண்பாடே தங்கியுள்ளது' என்று உண்மையான ஒரு இலட்சியவாதிக்கு அடுத்தவன் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சரி அதுதான் விடுத்து' ''இது தான் நேர்வழி நேராகப்போ குறிப்பிட்ட இலட்சியத்தை அடைவாய்'' என்றுகூற இடையில்ஓர்மரத்தை கண்டவுடன் ''ஐயோ நேராகப் போகத் தானே சொன்னான்இடையில் மரம் இருக்கிறதே அவன் அங்கிருந்து எதையும் சொல்லலாம் இங்குவந்தால்தானே'' தெரியும்என்று கூறி அந்த மரத்தை விலத்திப்போகத் தெரியாத வன்மனிதன் என்றுகூறுவதிலே அர்த்தமில்லை. ஆகவேவாழ்க்கையிலேசிலவற்றை கூறலாம் அதை விடுத்து அப்பாற்பட்டதை அடுத்தவன் வாழ்வில் நடைமுறைக்கு என்னால்

### இணுவை ஆர். கே. மேனன்

உண்மையில் வாழ்க்கையில் தோல்விகளைச் சந்திக்கின்றபோது நாம் மனம் சோர்ந்து விடக் கூடாது. அதில் தான் அசாதாரணத் துணிவு எம்மை அறியாமல் வரவேண்டும். (அதற்கு தியானத்துடன் கூடிய யோகப்பயிற்சி நிச்சயம் உங்களுக்கு கைகொடுக்கும்) வாழ்க்கையில் சாதிப்பவனுக்குத்தான் சோதனைகள் நெருங்கி வரும். அதற்காக நாம் போட்ட இலட்சியத்தை கைவிடக் கூடாது. அன்று சித்தார்த்தர் ஞானம் பெற விரும்பிச் சென்றபோது 'இல்லறத்தில் ஈடுபட்டவருக்கு. ஞானவழிக்கு இடமில்லை' என்று கூறிய முனிவரின் சோதனை வார்த்தையை கேட்டிருந்தால் இன்று பௌத்தமதம் தோன்றியிருக்க முடியுமா? அப்பர் சுவாமிகள் கைலையைக் காணச் சென்றபோது 'கைலாசமலை உச்சியை உம்மால் அடைய முடியாது' என்ற முனிவரின் சோதனை வார்த்தையை கேட்டிருந்தால் அவர் கைலாயமுக்தி அடைந்து இருக்க முடியுமா? நிச்சயமாக ஓர் இலட்சிய

கொண்டுவர முடியாது.

அந்த வகையில் மனிதனுடைய வாழ்க்கையில் சாதிக்க வேண்டிய பருவம் வாலிபம் தான் இதில் எத்தனையோ கடமைகள் எமக்காக காத்திருக்கின்றன. அதே நேரம் எத்தனையோ சோதனைகளும் எம்மை எதிர்காலத்தில் எதிர்கொள்ள இருக்கின்றன. அதற்காகத்தான் சொல்கின்றேன் எதிர்காலக் தூண்களே உங்கள் கையில் தான் எமது சமூகம் உள்ளது. எமது நாடு உள்ளது. எமது சமூகத்தில் குற்றங்குறைகளுக்கும் நீங்கள் தான் பொறுப்பாளிகள் அதேநேரம் எமது சமூகத்தின் ஓர் உயர்ச்சிக்கும் நீங்கள் தான் பெருமையாளிகள். இரும்புமனம் கொண்ட இளைஞர்களாக நீங்கள் வளர வேண்டும். இலட்சியங்கள் குறிக்கோளின் அடிப்படையில் நீங்கள் முன்னேற வேண்டும். எங்களிற்காக எமது வாழ்க்கையை மாற்றுவதை விட எமது சமூகத்துக்காக அடுத்தவனின் எதிர்காலத்துக்காக எம்மையே நாம்தியாகம்செய்வது மேல்.

### தென்மராட்சி வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர்

# முக்கிய பொருட்களை மீட்டு வர

# சர்வதேச செஞ்சிலுவை முயற்சி!

## ஈ.பி.டி.பி வட்டாரங்கள் தகவல்

(புலோலி)

தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் வசிப்போர் தமது இருப்பிடம் சென்று தங்களுடைய முக்கிய ஆவணங்களை மீட்டுவருவதற்கு விரைவில் அனுமதிக்கப்படலாம் என நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் தொடர்பு கொண்டதை அடுத்து அவர் பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஓர் கட்டமாக மேற்படி படைஅதிகாரிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து சாதகமான முடிவு விரைவில் வரும் என்றும் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விடயத்தில் சாவகச்சேரி வர்த்தகர்கள் கூடியஅக்கறை காட்டி வருவதாக ஏற்கனவே 'வலம்புரி' செய்தி வெளியிட்டது தெரிந்ததே.

(வ-க-52-43)

---

**ஈழத்தமிழர்...**

மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஈழத்தமிழ்மக்களின் நீண்டகாலப் போராட்டம் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படுகிறது. இதனை யாரும் மறுக்க இயலாது.

ஈழத்தில் நடைபெறும் போராட்டத்தை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான போராட்டமாக சுருக்கிவிடாமல் மக்களின் நீண்ட நெடிய ஒடுக்குமுறையினால் எழுந்த போராட்டம் எனக்கருதி தீர்வுகாண முயற்சித்தல் இன்றைய முக்கிய தேவையாகும்.

மக்கள் உரிமைக்காக நடாத்தப்படும் யுத்தத்தில் மக்களை அழித்து யாருடைய உரிமைகளை பாதுகாக்கப் போகிறோம். இலங்கை அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காக ஆட்சி நடத்தும் இந்திய அரசும் யுத்தத்திற்கு நடுவில் சிக்கியுள்ள தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு என்ன செய்யப் போகிறார்கள்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு எடுக்கும் முடிவானது அவதியுறும் தமிழ்மக்களுக்கு எதிரானதாக அமைந்துவிடக்கூடாது:

விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு

---

**அரசியல்......**

வந்திருப்பதா கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவிற்கு ஆதரவாக வாக்களிக்க முன்வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் சிலரின் பெயர் விபரம் வருமாறு.

பாராளுமன்ற உறுப்பினர்களான, மேர்வின் சில்வா, உபாலி அமரசிறி, தினேஷ் தொடங்கொட புத்திரசிகாமணி, உப திஸ்ஸடி சில்வா ஆகியோர் ஆதரவு அளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

**தமிழர்...**

ஜோசப்பரராசசிங்கம் எம்.பியும், யாழ்ப்பாணத்திலிருந்து மாவைசேனாதிராசா எம். பியும் கொழும்பிற்கு வருவதில் ஏற்பட்ட காலதாமதமே மத்திய குழுக்கூட்ட ஒத்திவைப்புக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

---

**பாராளுமன்ற...**

ஆயிரம் பொலிசார் அமர்த்தப்பட்டுள்ளனர். மீரிகமைப் பொலிசார் இதற்கென ஒரு பாதுகாப்புப் பிரிவை ஏற்படுத்தியுள்ளனர்.

இப்பாதுகாப்பில் வெடிப்பொருளைக் கையாளும் திறமைக்கு மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகபிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ண தெரிவித்தார்.

சட்ட மூலத்தின் விவாதம் மூன்றுதினங்கள் தொடர்ந்து நடைபெற்று 9ஆம் திகதி வாக்கெடுப்பு நடாத்தப்படும் (வ)

---

**பிரதம......**

தினத்தன்றே விவாதம் நடத்தப்படுமெனவும் அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்மாதம் 10ஆம் திகதி சமர்பிக்கவுள்ள தேர்தல் சீர்திருத்த சட்ட மூலம் தொடர்பாக ஆராய பிரதம நீதியரசர் தலமையில் ஐந்து பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமநீதியாரசர் சரத் என் சில்வா, அமிர்கிஸ்மாயில் சிறாணி பண்டாரநாயக்கா லக்ஷ்மன் வீரசேகரா, பிரியந்த பெரேரா ஆகியோரே இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இம்மசோதவை ஆராய்ந்து அறிக்கை சமர்பிககுமாறு இக்குழுவிற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தல் சீர்திருத்த சட்டமூலத்திற்கு எதிராக, ஐக்கிய தேசியக் கட்சி, புளொட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இன்று மனுத்தாக்கல் செய்யவுள்ளனர்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

---

**தமிழ்......**

தீர்வுத் திட்டம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசி அவர்களின் உடன்பாட்டைப் பெறாத இத்தீர்வுத்திட்டத்தை தமிழ் எம், பிக்கள் எவரும் ஆதரிக்கக் கூடாது மாறாக தமிழ் எம். பிக்கள் ஆதரித்து வாக்களித்தால் நாமும் தேர்தலில் போட்டியிட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அ. வினாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (வ)

---

**இனவாத**

---

# நெல்லியடியில் கூல்பார் முன்னால் கிரனேட்வீச்சு; சேதம் எதுவுமில்லை

(புலோலி)

நெல்லியடியில் உள்ள கூல்பார் அருகே கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடியில் இருந்து கொடிகாமம் செல்லும் வீதியில் உள்ள கூல்பார் ஒன்றின் முன்பாக நேற்று கிரனேட் ஒன்றுவெடித்ததாகவும், அங்கிருந்த ஸ்பீக்கர்ஷெட்டும்சிறிது சேதத்திற்குள்ளானதாகவும், ஆள்சேதம்எதுவும்ஏற்படவில்லையென்றும் இச்சம்பவம் நேற்றுபி.பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ18-52)

# புதிய யாப்பு பௌத்தத்தை இழிவுபடுத்தினால் அதை எதிர்ப்பேன்

## அமைச்சர் அனுருத்த உரை

(கொழும்பு).

''புதிய அரசியல் யாப்பு பௌத்த மதத்தை இழிவாக மதிப்பிடுவதாகவோ நாட்டை பிளவு படுத்தும் வகையிலோ அமையுமானால் அதனை எதிர்க்கின்ற முதலாவது நபர் நானே'' இவ்வாறு மணலாறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கத்தின் அடிக்கல்லை நாட்டிவைத்து உரை நிகழ்த்திய மின்சக்தி எரிபொருள் அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்தே தெரிவித்துள்ளார்.

அமைச்சாமேலும் உரையாற்றுகையில் புதிய யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் பௌத்த மதம் பாதுகாக்கப்படும் என்றார். (வ)

# சட்டமூலத்தை நிராகரிக்க ஒரேகுரலில் வாக்களியுங்கள்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பைத் தோல்வி அடையச் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குரலில் வாக்களிக்குமாறு ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் எழுதி உள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் டெல்வின் சில்வாவினால் கையொப்பமிட்டு இக் கடிதம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றி ஒரு தடவையாவது சிந்தித்து இச் சட்ட மூலத்தை நிராகரியுங்கள் எனவும் எழுதப்பட்டுள்ளது. (ந-7)

# வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பதை கூட்டணியை வலியுறுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

''அரசின் தன்மை, சமஷ்டியை நோக்கியதாக இருப்பதுடன் காணி அதிகாரங்கள, பிராந்தியங்களின் வசம் இருப்பதோடுவடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டுக்கு இணைந்த அலகாகவும் இருக்க வேண்டும் என்ற முடிவுகளுக்கு மாறாக தமிழர் விடுதலைக் கூட்டணி நடந்து கொள்ளக் கூடாது.

இவ்வாறு கூட்டணி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கூட்டணித் தொண்டர்கள், பல்துறைகள் அறிஞர்கள், மூத்த அரசியல் வாதிகள் போன்றோர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

மாவை சேனாதிராசா எம். பி தலைமையில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு இக்கூட்டம் நடைபெற்றது.

ஆளுநர் நியமனத்தைப் பொறுத்தளவில் அது முதலமைச்சரின் சிபார்சிலேயே நியமிக்கப்படவேண்டும்.

நாட்டின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படுவதைப்போல் மாகாணசபைகளின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட

---

**பல்கலை......**

தாரி எனக் கருதப்படும் மாணவன்பற்றி பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தமாதம் 27ஆம் திகதி மேற்படிபயிற்சி

தடையை இந்திய அரசு உடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும். தடை செய்யப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச முடியாது. எனவே சமாதானப் பேச்சிற்கு முன்பதாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி உண்மையான சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வழி அமைக்க வேண்டும். (வ)

## இனவாத...

தேசிய உறுமயக் கட்சி, சங்ககய சபா என்னும் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர் கூட்டத்தின் முன்னாள் குண்டு வெடித்ததில் வெளியில் நின்றவர்களே கடும் காயத்துக்குள்ளானர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)


# YOGI HOME SCIENCE ACADEMY

குறுகியகால புதிய வகுப்புக்கள் 19 - 08 - 2000
அன்று முதல் ஆரம்பமாக உள்ளது
தையல், கேக் ஐசிங். சமையற்கலை,
பூக்கள் தயாரித்தல், துணியில் வர்ண அலங்கரிப்பு.

## இத்துடன் விசேட பயிற்சிநெறிகள்

முக ஒப்பனை, தலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரம், மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள், மாச்சினி மலர் அலங்காரங்கள்.

சேரவிரும்பும் புதிய மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்

தவிர்க்க முடியாத காரணங்களினால் இடைநிறுத்தப்பட்ட வகுப்புக்களில் பயின்ற மாணவிகளும் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(1631)

# ஸ்ரீசெல்வா

[யாழ்ப்பாணம்]
கரன், ரோஜா, வடிவேலு
நடித்த

## கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[கி 688]

# கஜன்

திரை
ஊர்காவற்றுறை
பிரபு, ரோஜா
நடித்த

## திருநெல்வேலி

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/652)


இதேவேளை கடந்தமாதம் 27ஆம் திகதி மேற்படிபயிற்சி வகுப்பிற்குச் சென்ற மாணவர்களை வழிமறித்து அவர்களுக்கு மதுபானம் பருக்கி அனுப்பியதாகவும் இது குறித்துசம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் பெரிதும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். துவிச்சக்கர வண்டி வால்வ் ரியூப்களை கழற்றி எறிந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் குறித்து யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மற்றும் குறித்த பீடத்தைச்சேர்ந்த அதிகாரிகள் ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளது. [க - 52)

களின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வற்புறுத்திக்கூறினர்.

இதற்குப் பதிலழித்துப் பேசிய மாவை சேனாதிராசா இங்கு கூறப்பட்ட கருத்துக்களை மதித்து தமிழர் விடுதலைக்கூட்டணி நடந்து கொள்ளும் என்று கூறினார். (வ)

## 600 பாவனை...

யில் தற்போது 75 உள்ளக அழைப்புக்களும் 75 வெளியக அழைப்புக்களும் பொதுவான பாவனைக்கென வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சிறந்த நூலுக்கான விருதினைப் பெறும்.

**பண் சுமந்த பாடல்**

நூலாசிரியரும், வலம்புரி உதவி ஆசிரியருமான
கவிஞர் சு. துரைசிங்கம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களைப் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கின்றோம்
வலம்புரிக் குடும்பம்.



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.